II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

**MCOP. No. 180 of 2021**

Deposition of witness for the Petitioner / PW 3
solemnly by Thiru.K.Palanikumar, Assistant
in accordance with the provision of Act I for 1873 on 03.09.2025

| | | | |
|---|---|---|---|
| Name | : Aakash | Caste | : |
| Father's / Husband's Name | : | Calling | : |
| Age | : | Religion | : |
| Village | : | Taluk | : |

முதல் விசாரணை=

நான் இந்த வழக்கின் மூன்றாம் நபர். டெக் மகேந்திரா நிறுவனத்தில் எச்.ஆர் ஆக பணிபுரிகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். கெவின்ஜார்ஜ் என்பவர் எங்கள் நிறுவனத்தில் டெஸ்ட் இன் ஜீனியராக வேலைபார்த்தார். அவருடைய பணி நியமன கடிதம் ம.சா.ஆ.11 ஆகும். ஆகஸ்ட் 2019 - அக்டோபர் 2019 வரையான அவரது சம்பள சான்றிதழ்கள் ம.சா.ஆ.12 வரிசையாகும். அவருடைய வருகை பதிவேடு ஜீன் 2019 முதல் அக்டோபர் 2019 வரை உள்ளது ம.சா.ஆ.13 ஆகும். அவருடைய சர்வீஸ் சான்றிதழ் ம.சா.ஆ.14 ஆகும்.

எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை=

ம.சா.ஆ.12 வரிசையில் கெவின்ஜார்ஜின் அடிப்படை சம்பளம் ரூ.9,782/- ஆகும். அவரது வீட்டுவாடகை படி ரூ.6,847/-ஆகும். மேற்கண்ட இரு தொகைகளும் ம.சா.ஆ.12 வரிசையில் மாறவில்லை. இதை இரண்டையும் கூட்டினால் ரூ.16,629/- ஆகும். மற்றவை அலவன்ஸ் ஆகும். பணி உயர்வு பெறும் போது தான் அவை மாறும். ம.சா.ஆ.12ல் போனஸ் ரூ.4,000/- குறிப்பிடப்பட்டுள்ளது அவர் பெற்ற அட்வான்ஸ் தொகையில் இருந்து கழிக்கப்பட்ட தொகையாகும். Flexi Pay என்பது பணி திறனைப்பொருத்து மாறும். அவர் இறந்ததற்கு எங்கள் நிறுவனத்தில் பணம் கொடுத்தார்களா என்றால் நிறுவன ஆவணங்களை பார்த்து தான் சொல்ல முடியும்.

(2ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கா நிறுத்திவைக்கப்படுகிறது).